1400 வது ஆண்டு அல்குர்ஆன் விழா தேசியக் குழுவின் வெளியீடு

அல்குர்ஆனின் ஆணைகள்

அல்குர்ஆன் அருளப்பட்டு 1400 ஆண்டுகள் பூர்த்தியையிட்டு, அரசாங்கம் நியமனம் செய்துள்ள தேசியக் குழுவின் அனுசரணையோடு, இலங்கை முஸ்லிம் மாணவர்க்கிடையே கல்வியமைச்சு நடத்தவிருக்கும் போட்டிப் பரீட்சைக்கான பாடநூல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, கலாசார அமைச்சர்

கௌரவ ஐ. எம். ஆர். ஏ. ஈரியகொல்ல அவர்கள்

உவந்தளித்த

ஆசிச் செய்தி

முஸ்லிம் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படவிருக்கும் "அல்குர்ஆனின் ஆணைகள்" என்ற நூலுக்கு இச்செய்தியை எழுதச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெரிதும் மகிழ்கின்றேன். எதைச் செய்யவேண்டும் எதைச் செய்யக்கூடாது என்பன விளக்கும் இந்நூல், முஸ்லிம் மாணவர்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

பரிசுத்த குர்ஆன் அருளப்பட்டு 1400 ஆண்டுகள் பூர்த்தியாவதையிட்டு நடைபெறும் விழாக்கள் வெற்றியுற நல்லுதவிகள் புரிய சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மிகமிக மகிழ்கிறேன். இவ்விழாக்களின் சகல விஷயங்களிலும் ஒத்துழைக்கவேண்டுமென்றும் இவற்றைச் சிறப்பாகக் கொண்டாடுதற்குத் தேவையான சகல நடைவடிக்கைகளையும் எடுக்கவேண்டுமென்றும், என் அமைச்சின் கீழுள்ள இலாக்காக்களுக்கு, கல்வி கலாசார அமைச்சர் என்றமுறையில், உத்தரவிட்டுள்ளேன்.

இவ்விழாவையொட்டி, அகில இலங்கை முஸ்லிம் மாணவர்க்கிடையே, கல்வியமைச்சு நடத்தவிருக்கும் பரீட்சைக்குரிய பாடநூலாக, அவ்வமைச்சு இந்நூலை வெளியிடுகின்றது. ஆயினும் பரிசுத்த குர்ஆனின் அறிவுப் போதனைகள் என்றும் நிலையானவை என்றே நான் கருதுகின்றேன். எனவே, இவ்விழாவுக்குப்பின்னும் முஸ்லிம் பிள்ளைகள் இந்நூலை நன்கு கற்றுய்ந்தொழுக வேண்டும் என்பதே என் ஆசையும் ஆசியுமாகும்.

இவ்வாண்டிலும் இனிவரும் ஆண்டுதோறும் முஸ்லிம் மாணவரின் சமய அறிவையும் நெறியையும் வளர்க்க இந்நூலைப் பயன்படுத்தல், முஸ்லிம் ஆசிரியர்களின் புனிதமான கடமை என்றெண்ணுகிறேன்.

இங்ஙனம்,

ஐ. எம். ஆர். ஏ. ஈரியகொல்ல

கல்வி, கலாசார அமைச்சு,
மலே வீதி, கொழும்பு 2,
1.8.1968.

2—H 16133—10,000 (8/68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில், வேலைவசதி அமைச்சரும் அல்குர்ஆன் விழா தேசியக்குழுவின் தலைவருமான

கௌரவ அல்ஹாஜ் எம். எச். முஹம்மத் அவர்கள்

உவந்தளித்த

நல்லாசி

அல்குர்ஆன் அருளப்பட்டு 1400 ஆண்டு பூர்த்தியும் அதுபற்றிய விழாக்களும் உலகமுஸ்லிம்களின் சமய, சமூக, கலாசார வாழ்க்கையில் ஒரு மகத்தான இடத்தைப் பெறுகின்றன. இலங்கை முஸ்லிம்களிடையேயும் இவை மிகமுக்கியமான சம்பவங்களே.

இலங்கை முஸ்லிம்களின் தேக்க நிலையைப் போக்கி, அருள் மறையாம் அல்குர் ஆனின் போதனைகளின் அழியாத உண்மைகளில் அவர்களின் கவனத்தைத் திருப்புதலே இவ்விழாக்களின் நோக்கம்.

இவ்விழாக்களின் சகல விஷயங்களிலும் அரசாங்கத்தின் சார்பாய் நமக்குத்துணை செய்யும் எமது பிரதம மந்திரி அவர்களுக்கும் கல்வி, கலாசார அமைச்சர் அவர்களுக்கும், இலங்கை முஸ்லிம்களின் சார்பாய் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இது சந்தர்ப்பம் என்று எண்ணுகிறேன்.

இந்நூலை வெளியிடுவதன் மூலம் கல்வியமைச்சு இந்நாட்டு முஸ்லிம் சமூகத்தின் நல்லபிமானத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

அல்குர்ஆனின் தூது, ஒரு புத்துணர்ச்சி; ஒரு புத்தூக்கம்; ஓர் அறைகூவல். அது தெய்வீகத்தன்மை வாய்ந்த இலக்கியம். ஆத்ம சாந்திக்கும் ஈடேற்றத்துக்கும் வழி காட்டி. அது சிந்திப்பவர்களையும் கேட்போரையும் கவர்வதில் நிகரற்றது.

முஸ்லிம் மாணவர்கள், இந்நூலை விரும்பிக் கற்று, மேலும் மேலும் விளங்கி, அல்லாஹ்வின் போதனையின் பொருளை என்றும் ஏற்று நடப்பார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

தொழில், வேலை வசதி அமைச்சு,
கொழும்பு 7,
1–8–1968.

இங்ஙனம்,
எம். எச். முஹம்மத்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ۝ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ مٰلِكِ
يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ
وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا
الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ
اٰمِيْن

அல்-குர்ஆன் அருளப்பட்டு ஆயிரத்து நானூறும் ஆண்டு பூர்த்தியாவதையிட்டு முஸ்லிம் உலகம் மகிழ்ச்சியுறும் இச் சந்தர்ப்பத்தில், அல்-குர்ஆனில் நம் கவனத்தைச் செலுத்துதல் மிகமிகப் பொருத்தமானதேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ذٰلِكَ الْكِتَابُ لَا رَيْبَ فِيهِ هُدًى لِّلْمُتَّقِينَ

"அந்த வேதநூல் இறைபக்தர்கட்கு வழிகாட்டி;
அதிற் சந்தேகமில்லை"

இது, அல்-குர்ஆனைப்பற்றி அதை இறக்கிய அல்லாஹ்வின் கருத்து. ஆம், அறியாமையின் வழி வந்த இருள்மயமான வாழ்விலிருந்து ஒளிமயமானதொரு புது வாழ்வின்பால் உலக மாந்தரை இட்டுச் செல்வதே அல்-குர்ஆனின் முழு முதல் நோக்கம். இந்த நோக்கத்தில் அது வெற்றி கண்டது. அது கூறும் பூரணமான வாழ்க்கைத் திட்டத்துக்கு நிகரான ஒரு திட்டம் இதுவரை தோற்றுவிக்கப்படவில்லை. இது உலகமே ஏற்றுக்கொள்ளும் ஓர் உண்மை.

இம்மை, மறுமை இரண்டிலும் செம்மையருள் நல்கத் தக்க நேர் வழியைக் காட்டுவதில் அல்குர்ஆன் கையாளும் முறை அற்புதமானது. நல்வினையின் நற்பயனைக் கூறி நல்லவர்களைப் புகழ்கிறது. தீமையின் தீய பயனைக் கூறி தீயவரை எச்சரிக்கின்றது. இவ்வுண்மைகளைத் தத்துவ ரீதியில் விளக்கும்போது ஓர் ஒப்பற்ற தத்துவ நூலாகவும், சட்ட நுணுக்கங்களோடு விளக்கும்போது ஓர் நிகரற்ற அறிவு நூலாகவும், சரித்திரச் சான்றுகளை எடுத்துக் காட்டும்போது அரியதொரு சரித்திர ஏடாகவும், சுவைமிக்க சம்பவங்களை எடுத்து விமர்சிக்கும் போது ஓர் ஒப்புயர்வற்ற காவியமாகவும் ஏக காலத்தில் மிளிரும் தனிச் சிறப்பு அல்குர்ஆனுக்கு மாத்திரமே சொந்தமானது.

.. மனிதனின் அறிவையும், ஆராய்ச்சியையும் அடிப்படையாய்க் கொண்டே அவனைச் சிந்திக்க வைத்து, அவனுக்கு அரியதொரு வாழ்க்கை முறையைக் காட்டி, உலகில் அறிவையும் ஆராய்ச்சியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் வளர்த்த ஒரே வேதநூல் அல்குர்ஆன். அதன் மொழி நடை மிக்க உயர்ந்தது ; ஆனால் இலகுவானது. சொன்னயமும் பொருள் நயமும் செறிந்தது. மனித சக்திக்கு அப்பாற் பட்டது. ''நாம் நமது அடியார்மீது இறக்கிய இந்த வேதநூலில் நீங்கள் சந்தேகம் கொள்வீர்களாயின், இதன் அத்தியாயத்தைப்போன்றதொரு அத்தியாயத்தையேனும் இயற்றுங்கள் பார்ப்போம்'' என்னும் அல்லாஹ்வின் அறை கூவலுக்கு இன்றுவரை பதில் கூறப்படாமலிருப்பதே அல்குர்ஆனின் தெய்வீகத் தன்மைக்குத் தக்க சான்றாகும்.

நூற்றுப்பதினான்கு அத்தியாயங்களைக் கொண்ட தெய்வீகப் பேரிலக்கியமாம் அல்குர்ஆனின் முழுப் பொருளையும் இச் சிறு வெளியீட்டில் அடக்கிவிட முடியாது. எனவே எவர்க்கும் பயன் தரத்தக்க ஏவல் விலக்கல் சம்பந்தமான கட்டளைகள் சிலவற்றைத் தொகுத்து இங்கே சமர்ப்பிக்கின்றோம். அருள் மறையாம் அல் குர்ஆனை ஆதிமுதல் அந்தம்வரை ஆர்வத்தோடு ஆய்ந்துணர்ந் தொழுக இவ்வெளியீடு துணை செய்ய அல்லாஹ்வை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
எம். பீ. நூர்தீன்

கல்வி அமைச்சு,
கொழும்பு-2,
1-8-68

தலைவர்,
1400 வது ஆண்டு திருக்குர்ஆன்
தேசிய விழா சம்பந்தமான பாட
சாலை நிகழ்ச்சிக் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவ்ஹீத்—ஏகதெய்வக்கொள்கை

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۚ اَللّٰهُ الصَّمَدُ ۚ لَمْ يَلِدْ وَلَمْ يُوْلَدْ ۙ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ ۚ

சொல்க, அல்லாஹ் ஒருவனே. அல்லாஹ்வின் பால் எல்லா சிருஷ்டிகளுக்கும் தேவையுண்டு. அவன் எவரையும் பெறவுமில்லை. எவருக்கும் பிறக்கவுமில்லை. அவனுக்கு எவரும் நிகருமில்லை. *(112 : 1-4)*

فَاِلٰـهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ فَلَهٗۤ اَسْلِمُوْا ۚ

உங்கள் இறைவன் ஒரே இறைவன். அவனுக்கே கட்டுப்படுங்கள். *(22 : 34)*

وَلَا تَجْعَلْ مَعَ اللّٰهِ اِلٰهًا اٰخَرَ فَتَقْعُدَ مَذْمُوْمًا مَّخْذُوْلًا ۚ

அல்லாஹ்வுடன் வேறொரு கடவுளை வைத்துக் கொள்ளாதீர் ; நீர் ஏமாற்றமும் இழிவும் அடைய நேரிடும்! *(17 : 22)*

وَلَا تَجْعَلْ مَعَ اللّٰهِ اِلٰهًا اٰخَرَ فَتُلْقٰى فِىْ جَهَنَّمَ مَلُوْمًا مَّدْحُوْرًا ۚ

அல்லாஹ்வுடன் மற்றொரு இறைவனை ஆக்காதீர் ; நீர் நிந்திக்கப்பட்டு சபிக்கப்பட்டு நரகில் எறியப்படுவீர். *(17 : 39)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

قُلِ ادْعُوا اللّٰهَ اَوِ ادْعُوا الرَّحْمٰنَ اَيًّا مَّا
تَدْعُوْا فَلَهُ الْاَسْمَآءُ الْحُسْنٰى ۚ

''அல்லாஹ்வை வேண்டுங்கள் ; அருளாளனை வேண்டுங்கள். நீங்கள் எப்படி அழைத்தாலும் அவனுக்கு அழகிய நாமங்கள் உண்டு'' எனக் கூறுவீராக. *(17 : 110)*

وَلَا تَدْعُ مِنْ دُوْنِ اللّٰهِ مَا لَا يَنْفَعُكَ
وَلَا يَضُرُّكَ فَاِنْ فَعَلْتَ فَاِنَّكَ اِذًا
لَّمِنَ الظّٰلِمِيْنَ ۝

அல்லாஹ்வைத் தவிர, உமக்கு எவ்வித நன்மையோ தீமையோ செய்ய முடியாத எதையும் வேண்டாதீர். அப்படி வேண்டினால், நிச்சயமாக வழி தவறியவரைச் சேர்ந்தவராவீர். *(10 : 106)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈமான் — இறை நம்பிக்கை

وَلَا تَهِنُوا وَلَا تَحْزَنُوا وَأَنتُمُ
الْأَعْلَوْنَ إِن كُنتُم مُّؤْمِنِينَ ۝

தளர்ந்து விடாதீர்கள் ; கவலை கொள்ளாதீர்கள். நீங்கள் முஃமின்களாயின் நீங்களே மிக மேலானவர்கள். *(3 : 139)*

قُولُوا آمَنَّا بِاللَّهِ وَمَا أُنزِلَ إِلَيْنَا وَمَا أُنزِلَ
إِلَىٰ إِبْرَاهِيمَ وَإِسْمَاعِيلَ وَإِسْحَاقَ وَيَعْقُوبَ
وَالْأَسْبَاطِ وَمَا أُوتِيَ مُوسَىٰ وَعِيسَىٰ وَمَا
أُوتِيَ النَّبِيُّونَ مِن رَّبِّهِمْ لَا نُفَرِّقُ بَيْنَ
أَحَدٍ مِّنْهُمْ وَنَحْنُ لَهُ مُسْلِمُونَ ۝

''அல்லாஹ்வையும் எங்களுக்கு அருளப்பட்டதையும் இப்ராஹீம், இஸ்மாஈல், இஸ்ஹாக், யஃகூப் ஆகியோருக்கும் இவர்களின் சந்ததியினருக்கும் அருளப்பட்டவற்றையும் மூஸா, ஈஸா ஆகியோருக்கும் ஏனைய நபிமாருக்கும் இறைவனிடமிருந்து அருளப்பட்டவற்றையும் நம்புகிறோம் ; இவர்களுக்கிடையில் பாகுபாடு காட்டமாட்டோம் ; நாம் அவனுக்கே வழிப்படுகின்றோம்'' எனக் கூறுங்கள். *(2 : 136)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ ءَامِنُوا۟ بِٱللَّهِ وَرَسُولِهِۦ
وَٱلْكِتَٰبِ ٱلَّذِى نَزَّلَ عَلَىٰ رَسُولِهِۦ
وَٱلْكِتَٰبِ ٱلَّذِىٓ أَنزَلَ مِن قَبْلُ وَمَن
يَكْفُرْ بِٱللَّهِ وَمَلَٰٓئِكَتِهِۦ وَكُتُبِهِۦ وَ
رُسُلِهِۦ وَٱلْيَوْمِ ٱلْءَاخِرِ فَقَدْ ضَلَّ
ضَلَٰلًۢا بَعِيدًا ۝

விசுவாசிகளே, அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும், அவன் தன் தூதர்மீது இறக்கிய வேதத்தையும் அவன் முன்பு இறக்கிய வேதத்தையும் நம்புங்கள். அல்லாஹ்வையும் அவனுடைய மலக்குகளையும் வேதங்களையும் தூதர்களையும் இறுதி நாளையும் மறுப்பவன், நிச்சயமாக, மிக்க பாரதூரமாக வழிகெட்டவன்.

(4 : 136)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமை நாள்

وَاتَّقُوْا يَوْمًا لَا تَجْزِىْ نَفْسٌ عَنْ
نَفْسٍ شَيْئًا وَلَا يُقْبَلُ مِنْهَا شَفَاعَةٌ
وَلَا يُؤْخَذُ مِنْهَا عَدْلٌ وَلَا هُمْ يُنْصَرُوْنَ ٥

ஒரு ஆத்மா இன்னொரு ஆத்மாவுக்கு உதவி செய்ய முடியாத, எவ்வித சிபார்சும் ஏற்கப்படாத, எந்த நியாயமும் ஏற்றுக்கொள்ளப்படாத, எவ்விதத்திலும் உதவி செய்யப்படாத ஒரு நாளை அஞ்சி நடந்து கொள்க. *(2 : 48)*

يَاۤ اَيُّهَا النَّاسُ اتَّقُوْا رَبَّكُمْ وَاخْشَوْا
يَوْمًا لَا يَجْزِىْ وَالِدٌ عَنْ وَلَدِهٖ وَلَا
مَوْلُوْدٌ هُوَ جَازٍ عَنْ وَالِدِهٖ شَيْئًا ٥

மனிதர்களே, தந்தை தன் மகனுக்கோ மகன் தன் தந்தைக்கோ எவ்வித உதவியும் செய்ய முடியாத அந்த நாளைப் பயந்து கொள்க. உங்கள் இறைவனை அஞ்சி நடந்து கொள்க.

(32 : 33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம்

قُلْ إِنَّ الْمَوْتَ الَّذِي تَفِرُّونَ مِنْهُ
فَإِنَّهُ مُلَاقِيكُمْ ثُمَّ تُرَدُّونَ إِلَىٰ عَالِمِ
الْغَيْبِ وَالشَّهَادَةِ فَيُنَبِّئُكُمْ بِمَا
كُنْتُمْ تَعْمَلُونَ ٥

நீங்கள் வெருண்டோடும் மரணம் நிச்சயமாக உங்களைப் பிடித்துக் கொள்ளும். அப்பால், இரகசியத்தையும் பரகசியத்தையும் அறிந்த அல்லாஹ்விடம் கொண்டு செல்லப்படுவீர்கள். நீங்கள் செய்துகொண்டிருந்தவற்றை அவன் உங்களுக்கு அறிவிப்பான். *(62 : 8)*

உலக வாழ்வு

اِعْلَمُوْٓا اَنَّمَا الْحَيَاةُ الدُّنْيَا لَعِبٌ
وَلَهْوٌ وَزِيْنَةٌ وَتَفَاخُرٌ بَيْنَكُمْ
وَتَكَاثُرٌ فِي الْاَمْوَالِ وَالْاَوْلَادِ ٥

அறிந்து கொள்க, வீண் விளையாட்டும் வேடிக்கையும் வெறும் அலங்காரமும் உங்களுக்கிடையில் வீண் பெருமையும் பொருளும் சந்தானமும் அதிகப்படுத்துவதில் வீண் போட்டியுமே இவ்வற்ப உலக வாழ்வு. *(57 : 20)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

وَاضْرِبْ لَهُمْ مَثَلَ الْحَيَاةِ الدُّنْيَا
كَمَاءٍ اَنْزَلْنَاهُ مِنَ السَّمَاءِ فَاخْتَلَطَ
بِهِ نَبَاتُ الْاَرْضِ فَاَصْبَحَ هَشِيْمًا تَذْرُوْهُ
الرِّيَاحُ ۝

அவர்களுக்கு, இவ்வுலக வாழ்க்கைக்கு ஓர் உதாரணம் கூறுக. அது. நாம் வானத்திலிருந்து இறக்கிய மழைநீரைப் போன்றது. பூமியின் புற்பூண்டுகள் அந்நீரை உறிஞ்சி விடுகின்றன. அப்பால் அப்புற்பூண்டுகள், காற்றடித்துக் கொண்டு போகும் பதராகின் றன. *(18 : 45)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுகை

وَأَقِمِ الصَّلَاةَ إِنَّ الصَّلَاةَ تَنْهَىٰ عَنِ
الْفَحْشَاءِ وَالْمُنْكَرِ

தொழுகையை நிறைவேற்றுக. நிச்சயமாக தொழுகை, தீய எண்ணங்களையும் துர்ச் செயல்களையும் தடுக்கிறது. *(29 : 45)*

حَافِظُوا عَلَى الصَّلَوَاتِ وَالصَّلَاةِ
الْوُسْطَىٰ وَقُومُوا لِلَّهِ قَانِتِينَ •

தொழுகைகளையும் (சிறப்பாக) மத்தியத் தொழுகையையும் பேணித் தொழுங்கள். அல்லாஹ்வைத் தொழ உள்ளச்சத்தோடு நில்லுங்கள். *(2 : 238)*

وَأَقِمِ الصَّلَاةَ طَرَفَيِ النَّهَارِ وَزُلَفًا
مِنَ اللَّيْلِ إِنَّ الْحَسَنَاتِ يُذْهِبْنَ السَّيِّئَاتِ

பகலின் இரு முனைகளிலும் இரவின் ஒரு பகுதியிலும் தொழுகையை நிலை நிறுத்துக. நிச்சயமாக நல்லவை தீயவற்றைப் போக்கும். *(11 : 114)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

أَقِمِ الصَّلَاةَ لِدُلُوكِ الشَّمْسِ إِلَىٰ غَسَقِ اللَّيْلِ وَقُرْآنَ الْفَجْرِ ۝

சூரியன் சாய்ந்ததிலிருந்து இருள் சூழும் வரையும் பஜ்ர் நேரத்திலும் தொழுகையை நிலை நிறுத்துவீராக. *(17 : 78)*

وَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ وَارْكَعُوا مَعَ الرَّاكِعِينَ ۝

தொழுகையை நிறைவேற்றி ஸக்காத்தைக் கொடுங்கள். றுக்கூஉ செய்வோருடன் நீங்களும் றுக்கூஉ செய்யுங்கள். *(2 : 43)*

وَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ قَبْلَ طُلُوعِ الشَّمْسِ وَقَبْلَ غُرُوبِهَا وَمِنْ آنَاءِ اللَّيْلِ فَسَبِّحْ وَأَطْرَافَ النَّهَارِ لَعَلَّكَ تَرْضَىٰ ۝

சூரிய உதயத்துக்கு முன்னரும் அஸ்தமனத்தின் முன்னரும் இரவிலும் பகலிலும் உம் இறைவனைப் புகழ்ந்து துதி செய்வீராக; நீர் திருப்தியடையலாம். *(20 : 130)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

قُلْ لِعِبَادِيَ الَّذِيْنَ آمَنُوا يُقِيْمُوا الصَّلَاةَ وَيُنْفِقُوا مِمَّا رَزَقْنَاهُمْ سِرًّا وَعَلَانِيَةً مِنْ قَبْلِ أَنْ يَأْتِيَ يَوْمٌ لَا بَيْعٌ فِيْهِ وَلَا خِلَالٌ

வியாபாரமும் சினேகமும் இல்லாத மறுமை நாள் வரு முன்பே தொழுகையைக் கடைப்பிடித்து, நாம் அவர்களுக்குக் கொடுத்த வற்றிலிருந்து இரகசியமாகவும் வெளிப்படையாகவும் செலவு செய்யும்படி, விசுவாசங் கொண்ட என் அடியார்க்குச் சொல்க. *(14 : 31)*

وَأْمُرْ أَهْلَكَ بِالصَّلَاةِ وَاصْطَبِرْ عَلَيْهَا ۝

தொழுதுவருமாறு உமது குடும்பத்தாரை ஏவுக. அதன் மீது உறுதியாகவும் இருப்பீராக.. *(20 : 132)*

يَا أَيُّهَا الَّذِيْنَ آمَنُوا اذْكُرُوا اللّٰهَ ذِكْرًا كَثِيْرًا وَسَبِّحُوْهُ بُكْرَةً وَأَصِيْلًا ۝

விசுவாசிகளே, அல்லாஹ்வை அதிகமாகத் தியானியுங்கள். காலையும் மாலையும் அவனைத் தூய்மைப்படுத்துங்கள். *(33 : 41,42)*

وَاذْكُرِ اسْمَ رَبِّكَ بُكْرَةً وَأَصِيْلًا ۝

காலையும் மாலையும் உமது இறைவன் நாமத்தைத் தோத்திரம் செய்வீராக. *(76 : 25)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

يَا بَنِيٓ اٰدَمَ خُذُوا زِينَتَكُمْ عِنْدَ كُلِّ مَسْجِدٍ •

ஆதமின் மக்களே, ஒவ்வொரு தொழுகையின் போதும் உங்கள் அழகைக் கொள்ளுங்கள். (7 : 31)

வுளூ

يَآ اَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا قُمْتُمْ اِلَى الصَّلٰوةِ
فَاغْسِلُوْا وُجُوْهَكُمْ وَاَيْدِيَكُمْ اِلَى
الْمَرَافِقِ وَامْسَحُوْا بِرُءُوْسِكُمْ وَ
اَرْجُلَكُمْ اِلَى الْكَعْبَيْنِ •

விசுவாசிகளே, நீங்கள் தொழுகைக்குப் போகும் போது உங்கள் முகங்களையும் முழங்கைவரை கைகளையும் கழுவிக் கொண்டு தலைகளையும் தடவிக்கொண்டு கரண்டை வரை கால்களையும் கழுவிக் கொள்ளுங்கள். (5 : 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூம்ஆ

يَآ اَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْآ اِذَا نُوْدِيَ لِلصَّلَاةِ
مِنْ يَوْمِ الْجُمُعَةِ فَاسْعَوْا اِلٰى ذِكْرِ اللّٰهِ
وَذَرُوا الْبَيْعَ ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ
اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ ٥

விசுவாசிகளே, வெள்ளிக்கிழமை ஜூம்ஆவுக்கு அழைக்கப்பட்டால் வியாபாரங்களை விட்டு, அல்லாஹ்வைத் தியானிக்க விரைந்து செல்லுங்கள். நீங்கள் அறிவுடையோராயிருப்பின் அப்படிச் செய்தல் உங்களுக்கு மிக்க நல்லது. *(62 : 9)*

தர்மம் — ஈகை

وَاَمَّا السَّآئِلَ فَلَا تَنْهَرْ وَاَمَّا بِنِعْمَةِ رَبِّكَ
فَحَدِّثْ ٥

கேட்டு வருபவனை வெருட்டாதீர்! உமது நாயனின் அருட்கொடையை எடுத்துக்கூறுக. *(93 : 10, 11)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

يَآ أَيُّهَا الَّذِيْنَ آمَنُوْآ أَنْفِقُوْا مِمَّا رَزَقْنَاكُمْ
مِنْ قَبْلِ أَنْ يَأْتِيَ يَوْمٌ لَا بَيْعٌ فِيْهِ وَلَا
خُلَّةٌ وَلَا شَفَاعَةٌ ۝

விசுவாசிகளே, எத்தகைய வியாபாரமும் உதவியும் சிபார்சும் இல்லாத ஒரு நாள் வருமுன், நாம் உங்களுக்குத் தந்துள்ள வற்றிலிருந்து நல்வழியிற் செலவு செய்யுங்கள். *(2: 254)*

وَأَنْفِقُوْا مِمَّا رَزَقْنَاكُمْ مِنْ قَبْلِ أَنْ
يَأْتِيَ أَحَدَكُمُ الْمَوْتُ ۝

உங்களில் ஒருவருக்கு மரணம் வருமுன் நாம் தந்தவற்றிலிருந்து நற்கருமங்களில் செலவு செய்க. *(64: 10)*

وَلَا يَأْتَلِ أُولُوا الْفَضْلِ مِنْكُمْ وَالسَّعَةِ
أَنْ يُؤْتُوْا أُولِي الْقُرْبٰى وَالْمَسَاكِيْنَ
وَالْمُهَاجِرِيْنَ فِيْ سَبِيْلِ اللّٰهِ وَلْيَعْفُوْا
وَلْيَصْفَحُوْا أَلَا تُحِبُّوْنَ أَنْ يَغْفِرَ اللّٰهُ
لَكُمْ وَاللّٰهُ غَفُوْرٌ رَحِيْمٌ ۝

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களில் பணமும் இயல்பும் உள்ளோர் சுற்றத்தார்க்கும் ஏழைகளுக்கும் இறைவன் பாதையில் ஹிஜ்ரத் சென்றவர்க்கும் கொடுக்காதிருக்க எண்ணம் கொள்ளவேண்டாம். இவர்களின் தவறுகளை மன்னித்து விடவேண்டும். அல்லாஹ் உங்களை மன்னிப்பதை நீங்கள் விரும்பவில்லையா, அல்லாஹ மிக மன்னிப்பவன்; மிக்க கிருபை செய்பவன் *(24: 22)*

قَوْلٌ مَعْرُوفٌ وَمَغْفِرَةٌ خَيْرٌ مِنْ صَدَقَةٍ يَتْبَعُهَا أَذًى ۝

தர்மம் கொடுத்துத் துன்புறுத்துவதைவிட நல்ல வார்த்தை சொல்லி மன்னித்து விடுதல் மிக நல்லது. *(2: 263)*

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تُبْطِلُوا صَدَقَاتِكُمْ بِالْمَنِّ وَالْأَذَىٰ كَالَّذِي يُنْفِقُ مَالَهُ رِئَاءَ النَّاسِ وَلَا يُؤْمِنُ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ ۝

விசுவாசிகளே, சொல்லிக்காட்டுவதன் மூலமும் துன்புறுத்துவதன் மூலமும் உங்கள் தர்மங்களை வீணாக்கிவிடாதீர்கள்; அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பாமல் மக்களிடம் புகழீட்டுதற்காகத் தன் பணத்தைச் செலவழிப்பவனைப் போன்று. *(2:264)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

وَابْتَغِ فِيمَا آتَاكَ اللهُ الدَّارَ الْآخِرَةَ وَلَا تَنْسَ نَصِيبَكَ مِنَ الدُّنْيَا وَ أَحْسِنْ كَمَا أَحْسَنَ اللهُ إِلَيْكَ وَلَا تَبْغِ الْفَسَادَ فِي الْأَرْضِ ۝

உமக்கு அல்லாஹ் தந்தவற்றைக்கொண்டு மறுவுலகைத் தேடிக்கொள்க. உலகில் உமக்குள்ள பங்கை மறந்துவிடாதீர். அல்லாஹ் உமக்கு நன்மை செய்தது போன்று நீரும் நன்மை செய்க. உலகில் தீமையை விரும்பாதீர். *(28: 77)*

وَلَا تَجْعَلْ يَدَكَ مَغْلُولَةً إِلَىٰ عُنُقِكَ وَلَا تَبْسُطْهَا كُلَّ الْبَسْطِ فَتَقْعُدَ مَلُومًا مَحْسُورًا ۝

உமது கையைக் கழுத்திலே மாட்டி உலோபியாகி விடாதீர். அதை முற்றாக விரித்தும் விடாதீர். அப்படிச் செய்தால் நீர் தூற்றுதலுக்கும் துயருக்கும் உள்ளாவீர். *(17: 29)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித்தல் – ஆராய்தல்

فَلْيَنْظُرِ الْاِنْسَانُ مِمَّ خُلِقَ خُلِقَ مِنْ
مَّآءٍ دَافِقٍ يَخْرُجُ مِنْ بَيْنِ الصُّلْبِ
وَالتَّرَآئِبِ ۝

மனிதன் எதிலிருந்து படைக்கப்பட்டான் என்று அவன் ஆராய்ந்து பார்க்கட்டும். முதுகெலும்பிலிருந்தும் விலாவெலும்பிலிருந்தும் பாய்ந்து வரும் நீரிலிருந்து அவன் படைக்கப்பட்டான். *(5 : 86)*

قُلْ سِيْرُوْا فِى الْاَرْضِ فَانْظُرُوْا كَيْفَ بَدَاَ الْخَلْقَ

பூவுலகிற் பிரயாணம் செய்து, இறைவன் எப்படி சிருஷ்டிகளைப் படைத்தான் என்பதை ஆராய்ந்து பாருங்கள் என்று கூறுக. *(29 : 20)*

فَانْظُرُوْآ اِلٰٓى اٰثَارِ رَحْمَةِ اللّٰهِ كَيْفَ يُحْيِى
الْاَرْضَ بَعْدَ مَوْتِهَا ۗ اِنَّ ذٰلِكَ لَمُحْيِى الْمَوْتٰى ۚ
وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ۝

அல்லாஹ்வின் அருளின் பலன்களைக் கவனித்துப் பாருங்கள். பூமியை அதுமடிந்த பிறகு எப்படி உயிர்ப்பிக்கிறான் என்று கவனியுங்கள். நிச்சயமாக அவன்தான் இறந்தவர்களை உயிர்த்தெழச் செய்பவன். அவன், எல்லாம் செய்ய வல்லவன். *(30 :50)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமை

وَاعْتَصِمُوا بِحَبْلِ اللّٰهِ جَمِيعًا وَلَا تَفَرَّقُوا ۝

எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றைப் பற்றிக்கொள்க. பிரிந்து விடாதீர். *(3 :103)*

وَتَعَاوَنُوا عَلَى الْبِرِّ وَالتَّقْوٰى وَلَا تَعَاوَنُوا
عَلَى الْاِثْمِ وَالْعُدْوَانِ ۝

இறைவனை அஞ்சி நற்கருமங்களைச் செய்வதில் ஒத்தாசை செய்து கொள்ளுங்கள். பாபம் செய்வதிலும் வரம்பு மீறி நடந்து கொள்வதிலும் ஒத்தாசை செய்து கொள்ள வேண்டாம். *(5 :2)*

اِنَّمَا الْمُؤْمِنُوْنَ اِخْوَةٌ فَاَصْلِحُوا بَيْنَ
اَخَوَيْكُمْ وَاتَّقُوا اللّٰهَ لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ ۝

நிச்சயமாக விசுவாசிகள் யாவரும் சகோதரர்கள். எனவே உங்கள் இரு சகோதரர்கட்கிடையில் சமரசம் செய்துவையுங்கள். அல்லாஹ்வை அஞ்சி நடவுங்கள்; நீங்கள் கிருபைக்குள்ளாவீர்கள். *(49 : 10)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

يَآ اَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا اصْبِرُوْا وَصَابِرُوْا وَ
رَابِطُوْا وَاتَّقُوا اللّٰهَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ ۝

விசுவாசிகளே, பொறுமையோடிருங்கள். பரஸ்பரம் பொறுமையைக் கூறி இணைந்து நடவுங்கள். அல்லாஹ்வை அஞ்சுங்கள்; வெற்றி பெறுவீர்கள். (3 : 200).

وَاِنْ طَآئِفَتَانِ مِنَ الْمُؤْمِنِيْنَ اقْتَتَلُوْا
فَاَصْلِحُوْا بَيْنَهُمَا ۝

விசுவாசிகளில் இரு கோஷ்டியினர் சண்டையிட்டுக்கொண்டால், அவர்களைச் சமாதானப்படுத்திவிடுங்கள். (49 :9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்போதனை – தப்லீஃ

ٱدْعُ إِلَىٰ سَبِيلِ رَبِّكَ بِٱلْحِكْمَةِ وَٱلْمَوْعِظَةِ
ٱلْحَسَنَةِ وَجَٰدِلْهُم بِٱلَّتِى هِىَ أَحْسَنُ ۝

உமது இறைவனின் பாதையின் பால் ஞானத்தைக் கொண்டும் நல்லுபதேசத்தைக் கொண்டும் அழைப்பீராக. நல்லவற்றைக் கொண்டே அவர்களோடு வாக்குவாதம் செய்வீராக. *(12 : 125)*

وَأَنذِرْ عَشِيرَتَكَ ٱلْأَقْرَبِينَ ۝

உமது நெருங்கிய சுற்றத்தார்கட்கு எச்சரித்து உபதேசம் செய்வீராக. *(26 : 214)*

وَقُولُوا۟ لِلنَّاسِ حُسْنًا

நல்லவற்றையே மக்களுக்குச் சொல்லுங்கள். *(2 : 83)*

ٱدْفَعْ بِٱلَّتِى هِىَ أَحْسَنُ ٱلسَّيِّئَةَ

நல்லவற்றைக் கொண்டே தீயவற்றைத் தவிர்த்துக் கொள்க. *(23 : 96)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

خُذِ الْعَفْوَ وَأْمُرْ بِالْعُرْفِ وَأَعْرِضْ
عَنِ الْجَاهِلِيْنَ ۝

மன்னித்தலைக் கைக்கொண்டு நல்லதை ஏவுக. அறிவற்றவர்களைப் புறக்கணித்து விடுக. *(7 : 199)*

وَلَا تَسُبُّوا الَّذِيْنَ يَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ ۝

அல்லாஹ் அல்லாதவற்றை வேண்டுவோரைத் தூஷிக்காதீர்கள். *(6 : 108)*

يَا أَيُّهَا الَّذِيْنَ آمَنُوا لِمَ تَقُوْلُوْنَ مَا لَا تَفْعَلُوْنَ
كَبُرَ مَقْتًا عِنْدَ اللّٰهِ أَنْ تَقُوْلُوا مَا لَا تَفْعَلُوْنَ ۝

விசுவாசிகளே, நீங்கள் செய்யாதவற்றை ஏன் சொல்கின்றீர்கள்? நீங்கள் செய்யாததைப் பிறருக்குச் சொல்லுதல் அல்லாஹ்விடம் மிகவும் வெறுக்கப்பட்டது. *(2 : 61)*

وَلَا تَكُوْنُوا كَالَّذِيْنَ خَرَجُوا مِنْ دِيَارِهِمْ
بَطَرًا وَرِئَاءَ النَّاسِ ۝

பெருமைக்காகவும் மனிதர்களுக்குக் காட்டிக்கொள்வதற்காகவும் தம் வீடுகளிலிருந்து புறப்பட்டவர்களைப் போன்று நீங்களும் ஆக வேண்டாம். *(8 : 47)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகம்

وَجَاهِدُوا فِي اللّٰهِ حَقَّ جِهَادِهِ ۝

அல்லாஹ்வின் பாதையில் உண்மையான தியாகம் செய்யுங்கள். (22 : 78)

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ ۝

''என் தொழுகையும் ஏனைய வணக்கங்களும் என் வாழ்வும் என் மரணமும் சர்வ உலக இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே'' என்று கூறுக. (6 : 162)

وَلَا تَقُولُوا لِمَنْ يُقْتَلُ فِي سَبِيلِ اللّٰهِ أَمْوَاتٌ بَلْ أَحْيَاءٌ وَلَٰكِنْ لَا تَشْعُرُونَ ۝

அல்லாஹ்வின் பாதையில் தியாகம் செய்யும்போது கொலை செய்யப்பட்டவர்களை இறந்தவர்கள் என்று கூறாதீர்கள். அவர்கள் உயிரோடிருப்பவர்கள். ஆனால் அதை நீங்கள் உணர்ந்து கொள்ளவில்லை. (2 : 154)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமை

فَاصْبِرْ لِحُكْمِ رَبِّكَ وَلَا تُطِعْ مِنْهُمْ اٰثِمًا اَوْ كَفُوْرًا

உமதிறைவனின் தீர்ப்பைப் பொறுமையோடு ஏற்பீராக. அவர்களில் எந்தப் பாவிக்கும் நன்றி கெட்டவனுக்கும் தலைசாய்க்காதீர். *(76 : 24)*

يَا اَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اسْتَعِيْنُوْا بِالصَّبْرِ
وَالصَّلٰوةِ اِنَّ اللّٰهَ مَعَ الصّٰبِرِيْنَ ٥

விசுவாசிகளே, பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ், பொறுமையாளர்களோடு இருக்கிறான். *(2 : 152)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம்

يَآأَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا تَنَاجَيْتُمْ فَلَا تَتَنَاجَوْا بِالْاِثْمِ وَالْعُدْوَانِ وَمَعْصِيَةِ الرَّسُوْلِ وَتَنَاجَوْا بِالْبِرِّ وَالتَّقْوٰى ۝

விசுவாசிகளே, நீங்கள் பேசிக்கொண்டால், பாவமான, வரம்பு மீறிய அல்லது அல்லாஹ்வின் தூதருக்கு மாறு செய்யும் விசயங்களைப் பேச வேண்டாம். நன்மை செய்தலைப் பற்றியும் இறையச்சத்தைப் பற்றியும் பேசிக் கொள்க. *(58 : 9)*

قُلْ لِّلْمُؤْمِنِيْنَ يَغُضُّوْا مِنْ اَبْصَارِهِمْ وَيَحْفَظُوْا فُرُوْجَهُمْ ذٰلِكَ اَزْكٰى لَهُمْ اِنَّ اللّٰهَ خَبِيْرٌ بِمَا يَصْنَعُوْنَ ۝

தம் பார்வையைக் கட்டுப்படுத்தித் தம் கற்பையும் பேணிக் கொள்ளுமாறு விசுவாசிகளுக்குக் கூறுக. அது அவர்களைப் பரிசுத்தமாக்கும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்வதை நன்கு அறிந்தவன். *(24 : 30)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

وَقُلْ لِلْمُؤْمِنَاتِ يَغْضُضْنَ مِنْ أَبْصَارِهِنَّ وَيَحْفَظْنَ فُرُوجَهُنَّ وَلَا يُبْدِينَ زِينَتَهُنَّ إِلَّا مَا ظَهَرَ مِنْهَا وَلْيَضْرِبْنَ بِخُمُرِهِنَّ عَلَى جُيُوبِهِنَّ ۝

விசுவாசங்கொண்ட பெண்களுக்கும் கூறுக: அவர்கள் தம் பார்வையைக் கட்டுப்படுத்தித் தம் கற்பையும் பேணவேண்டும். தம் தேகத்தில் (தவிர்க்க முடியாவகையில்) வெளியே தெரிவதைத் தவிர தம் அலங்காரங்களை வெளிக்காட்ட வேண்டாம். தம் முந்தானைகளால் மார்பகங்களை மறைத்துக்கொள்ளவேண்டும் எனக் கூறுக. *(24 : 31)*

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا إِذَا قِيلَ لَكُمْ تَفَسَّحُوا فِي الْمَجَالِسِ فَافْسَحُوا يَفْسَحِ اللَّهُ لَكُمْ ۝

விசுவாசிகளே, நீங்கள் அமர்ந்திருக்கும் இடங்களில் அகன்றிருங்கள் என்று கூறப்பட்டால் அகன்று இடங்கொடுங்கள். அல்லாஹ் உங்களுக்கு இடம் தருவான். *(58 :11)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

وَلَا تُصَعِّرْ خَدَّكَ لِلنَّاسِ وَلَا تَمْشِ فِي الْأَرْضِ
مَرَحًا إِنَّ اللَّهَ لَا يُحِبُّ كُلَّ مُخْتَالٍ فَخُورٍ ۝

மனிதர்களைவிட்டு உமது முகத்தைத் திருப்பிக்கொள்ளாதீர். பூமியிற் பெருமை யடித்துக் கொண்டு நடக்காதீர். நிச்சயமாக கர்வங்கொண்டு பெருமையடிப்பவர் எவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை. *(31 : 18)*

وَاقْصِدْ فِي مَشْيِكَ وَاغْضُضْ مِنْ صَوْتِكَ

அமைதியாக நடப்பீராக. உமது சப்தத்தையும் கட்டுப்படுத்துக. *(31 : 19)*

خُذِ الْعَفْوَ وَأْمُرْ بِالْعُرْفِ وَأَعْرِضْ عَنِ الْجَاهِلِينَ

மன்னித்தலைக் கைக்கொண்டு, அறிவீனரைப் புறக்கணித்து, நல்லவைகளை ஏவுக. *(7 : 199)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَدْخُلُوا بُيُوتًا غَيْرَ
بُيُوتِكُمْ حَتَّىٰ تَسْتَأْنِسُوا وَتُسَلِّمُوا عَلَىٰ
أَهْلِهَا ذَٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ،

விசுவாசிகளே, மற்றவரின் வீடுகளில், அவ்வீட்டார்க்கு ஸலாம் சொல்லிக் கதைக்குமுன், நுழையாதீர்கள். இப்படி நடந்து கொள்வது உங்களுக்கு நல்லது. நீங்கள் நல்லுணர்வு பெறுவீர்கள். அவ்வீடுகளில் நீங்கள் ஒருவரையும் காணாவிட்டால், உங்களுக்கு அனுமதி கொடுக்கப்படும் வரை அவற்றிற் பிரவேசிக்காதீர்கள். *(24 : 27)*

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا يَسْخَرْ قَوْمٌ مِّن قَوْمٍ
عَسَىٰ أَن يَكُونُوا خَيْرًا مِّنْهُمْ وَلَا نِسَاءٌ مِّن
نِّسَاءٍ عَسَىٰ أَن يَكُنَّ خَيْرًا مِّنْهُنَّ وَلَا
تَلْمِزُوا أَنفُسَكُمْ وَلَا تَنَابَزُوا بِالْأَلْقَابِ

விசுவாசிகளே, ஒரு கோஷ்டி இன்னொரு கோஷ்டியைப் பரிகசிக்க வேண்டாம். அவர்கள் இவர்களை விடச்சிறந்தவர்களாயிருக்கக்கூடும். எந்தப் பெண்களும் மற்றப் பெண்களைப் பரிகசிக்கவும் வேண்டாம்; இந்தப்பெண்களைவிட அவர்கள் சிறந்தவர்களாயிருக்கக் கூடும். உங்களுக்கிடையில் ஏளனம் செய்துகொள்ள வேண்டாம்; பட்டப்பெயர் சொல்லிக்கொள்ள வேண்டாம்.

(49 : 11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

وَاتَّقُوا فِتْنَةً لَا تُصِيبَنَّ الَّذِينَ ظَلَمُوا مِنْكُمْ خَاصَّةً

அநியாயம் செய்தவர்களை மாத்திரம் பாதிக்காத (மற்றவர்களையும் பாதிக்கும்) குழப்பங்களைப் பயந்து கொள்க. (8:25)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا إِنْ جَاءَكُمْ فَاسِقٌ بِنَبَإٍ
فَتَبَيَّنُوا أَنْ تُصِيبُوا قَوْمًا بِجَهَالَةٍ فَتُصْبِحُوا
عَلَىٰ مَا فَعَلْتُمْ نَادِمِينَ ۝

விசுவாசிகளே, தீயவன் உங்களுக்கு ஒரு செய்தியைக் கொண்டு வந்தால் அதை நன்கு விசாரணை செய்து பாருங்கள். உண்மையை அறியாமல் ஒரு கோஷ்டியைத் தாக்கிவிட்டு அப்பால் நீங்கள் செய்தவற்றுக்கு நீங்களே கைசேதப்பட நேரும். (49 : 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்

وَاخْفِضْ لَهُمَا جَنَاحَ الذُّلِّ مِنَ الرَّحْمَةِ
وَقُلْ رَبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِي صَغِيرًا ۝

உமது அன்பினால் வந்த பணிவு என்னும் இறக்கையை உமது பெற்றோர்க்குத் தாழ்த்திக்கொடுப்பீராக. ''நாயனே, என்னை இவர்கள் பரிவோடு வளர்த்தது போல் நீயும் இவர்களுக்கு அன்பு காட்டுவாயாக!'' என்று பிரார்த்தனையும் செய்வீராக. *(17 : 24)*

فَلَا تَقُلْ لَهُمَا أُفٍّ وَلَا تَنْهَرْهُمَا وَقُلْ
لَهُمَا قَوْلًا كَرِيمًا ۝

அவர்களைச் சீ! என்று சொல்லாதீர், முகம் கடுகடுக்காதீர். அவர்களிடம் மரியாதையாய்ப் பேசுக. *(17 : 23)*

وَوَصَّيْنَا الْإِنْسَانَ بِوَالِدَيْهِ إِحْسَانًا
حَمَلَتْهُ أُمُّهُ كُرْهًا وَوَضَعَتْهُ كُرْهًا

பெற்றோர்கட்கு நன்றி செய்யும்படி மனிதனுக்கு நல்வாக்குச் சொன்னோம். அவனுடைய தாய் அவனை மிக்க வேதனையோடு சுமந்தாள்; வேதனையோடே பெற்றெடுத்தாள். *(46 : 15)*

3—H 16133

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

يَآاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَتَّخِذُوْا اٰبَآءَكُمْ وَاِخْوَانَكُمْ اَوْلِيَآءَ اِنِ اسْتَحَبُّوا الْكُفْرَ عَلَى الْاِيْمَانِ ۰

விசுவாசிகளே, உங்கள் தந்தையரோ சகோதரரோ விசுவாசத்தை விட்டு இறைவனை மறுத்தலை விரும்பினால், அவர்களை உங்கள் பொறுப்பாளராய் எடுத்துக்கொள்ளாதீர்கள். *(9 : 23)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுதைகள்

فَاَمَّا الْيَتِيْمَ فَلَا تَقْهَرْ

அனுதைகளைக் கடுகடுக்காதீர். *(93 : 9)*

وَاٰتُوا الْيَتٰمٰى اَمْوَالَهُمْ وَلَا تَتَبَدَّلُوا
الْخَبِيْثَ بِالطَّيِّبِ وَلَا تَاْكُلُوْٓا اَمْوَالَهُمْ اِلٰٓى
اَمْوَالِكُمْ اِنَّهٗ كَانَ حُوْبًا كَبِيْرًا ۝

அனுதைகளின் சொத்துக்களை அவர்களுக்குக் கொடுங்கள். நல்லதையும் தீயதையும் மாற்றிக்கொள்ளாதீர்கள். அவர்களின் சொத்துக்களை உங்கள் சொத்துக்களோடு சேர்த்துத் தின்றுவிடாதீர்கள். அது பெரும் பாவம். *(4 : 6)*

وَلَا تَقْرَبُوْا مَالَ الْيَتِيْمِ اِلَّا بِالَّتِيْ هِيَ
اَحْسَنُ حَتّٰى يَبْلُغَ اَشُدَّهٗ وَاَوْفُوْا بِالْعَهْدِ
اِنَّ الْعَهْدَ كَانَ مَسْـُٔوْلًا ۝

அனுதைப் பிள்ளைகள் பருவ வயதை அடையும் வரை, மிகவும் நல்ல முறையிலேயன்றி அவர்களின் சொத்தின் பக்கம் அணுகாதீர்கள். அவர்கள் விஷயத்தில் உங்கள் பொறுப்பை நிறைவேற்றுங்கள். நிச்சயமாக உங்கள் பொறுப்புக்கள் பற்றி விசாரிக்கப்படும். *(17 : 34)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகம்

وَأَقِيمُوا الْوَزْنَ بِالْقِسْطِ وَلَا تُخْسِرُوا الْمِيزَانَ

நிறுவையில் நேர்மையை நிலை நாட்டுக. குறைத்து நிறுக்காதீர். (55 : 9)

وَأَوْفُوا الْكَيْلَ إِذَا كِلْتُمْ وَزِنُوا
بِالْقِسْطَاسِ الْمُسْتَقِيمِ ۝

நீங்கள் அளந்தால் பரிபூரணமாக அளவுங்கள்; சரியான எடையைக் கொண்டு நிறுங்கள். (17 : 35)

وَيَا قَوْمِ أَوْفُوا الْمِكْيَالَ وَالْمِيزَانَ بِالْقِسْطِ
وَلَا تَبْخَسُوا النَّاسَ أَشْيَاءَهُمْ وَلَا تَعْثَوْا
فِي الْأَرْضِ مُفْسِدِينَ ۝

என் சமூகமே, அளவையிலும் நிறுவையிலும் நேர்மையைக் கடைப் பிடியுங்கள். மனிதரின் பொருட்களைக் குறைத்து அளக்காதீர்கள். பூமியில் விஷமம் செய்து திரியாதீர்கள். (11 : 85)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

وَيْلٌ لِّلْمُطَفِّفِيْنَ اَلَّذِيْنَ اِذَا اكْتَالُوْا عَلَى
النَّاسِ يَسْتَوْفُوْنَ وَاِذَا كَالُوْهُمْ اَوْ وَّزَنُوْهُمْ
يُخْسِرُوْنَ ۝

மனிதரிடம் கொள்வனவு செய்யும்போது சரியாக அளந்தும் விற்பனையின்போது குறைவாக அளந்தும், நிறுத்தும் மோசடி செய்வோருக்குக் கேடுதான். *(83 : 13)*

يَآاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا اِذَا تَدَايَنْتُمْ بِدَيْنٍ اِلٰى
اَجَلٍ مُّسَمًّى فَاكْتُبُوْهُ ؕ وَلْيَكْتُبْ كَاتِبٌ بَيْنَكُمْ بِالْعَدْلِ

விசுவாசிகளே, நீங்கள் ஒரு குறித்த தவணைக்குக் கடன் கொடுத்துக் கொண்டால், அதை எழுதிக்கொள்ளுங்கள். உங்களுக்கிடையில் எழுதுபவர் நீதியாக எழுத வேண்டும். *(2 : 282)*

يَآاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَاْكُلُوْا اَمْوَالَكُمْ بَيْنَكُمْ
بِالْبَاطِلِ اِلَّآ اَنْ تَكُوْنَ تِجَارَةً عَنْ تَرَاضٍ مِّنْكُمْ

விசுவாசிகளே, உங்களுக்குள் சம்மதத்தின் பேரில் நடைபெறும் வர்த்தகத்தின் மூலமேயன்றி, உங்களில் ஒருவர் மற்றவரின் பொருட்களை தவறான முறையில் உண்ண வேண்டாம். *(4 : 29)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டி

أَحَلَّ اللّٰهُ الْبَيْعَ وَحَرَّمَ الرِّبَا ۝

அல்லாஹ் வர்த்தகத்தை அனுமதித்தான் ; வட்டியை ஹரு மாக்கினன். (2 : 272)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَأْكُلُوا الرِّبَا أَضْعَافًا مُضَاعَفَةً ۝

விசுவாசிகளே, வட்டியைப் பன் மடங்காகப் பெருக்கி உண்ணு தீர்கள். (3 : 13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு

فَكُلُوا مِمَّا رَزَقَكُمُ اللَّهُ حَلَالًا طَيِّبًا وَاشْكُرُوا نِعْمَةَ اللَّهِ إِنْ كُنْتُمْ إِيَّاهُ تَعْبُدُونَ ۝

உங்களுக்கு அல்லாஹ் அருளியவற்றில் அனுமதிக்கப்பட்ட நல்லவற்றையே உண்ணுங்கள். நீங்கள் அவனையே வணங்குவோராயின் அவனுடைய அருளுக்காக நன்றி செலுத்துங்கள் **(16 : 114)**

كُلُوا وَاشْرَبُوا وَلَا تُسْرِفُوا إِنَّهُ لَا يُحِبُّ الْمُسْرِفِينَ

உண்ணுங்கள், பருகுங்கள், வீண்விரயம் செய்யாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ், வீண்விரயம் செய்வோரை விரும்புவதில்லை. *(7 : 13)*

فَكُلُوا مِمَّا ذُكِرَ اسْمُ اللَّهِ عَلَيْهِ إِنْ كُنْتُمْ بِآيَاتِهِ مُؤْمِنِينَ ۝

நீங்கள் அல்லாஹ்வின் வசனங்களை நம்பியவர்களாயின், அவனுடைய பெயர் சொல்லி அறுக்கப்பட்டவற்றையே உண்ணுங்கள் **(6 : 118)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

إِنَّمَا حَرَّمَ عَلَيْكُمُ الْمَيْتَةَ وَالدَّمَ وَلَحْمَ
الْخِنْزِيرِ وَمَا أُهِلَّ بِهِ لِغَيْرِ اللّٰهِ ۝

பிணமும், இரத்தமும், பன்றிமாமிசமும் அல்லாஹ் அல்லாதவற்றுக்குப் பலியிடப்பட்டவையும் உங்களுக்கு விலக்கப்பட்டவையே. *(2 : 173)*

وَلَا تَأْكُلُوٓا أَمْوَالَكُمْ بَيْنَكُمْ بِالْبَاطِلِ

உங்களின் பொருட்களை உங்களுக்கிடையில் தவறான முறையில் உண்ணாதீர்கள். *(2 : 188)*

يَآ أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تُحَرِّمُوا طَيِّبَاتِ مَا
أَحَلَّ اللّٰهُ لَكُمْ

விசுவாசிகளே, அல்லாஹ் உங்களுக்கு அனுமதித்த நல்லவற்றை ஹறாமாக்கிவிடாதீர்கள். *(5 : 87)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயவை

قُلْ إِنَّمَا حَرَّمَ رَبِّيَ الْفَوَاحِشَ مَا ظَهَرَ مِنْهَا
وَمَا بَطَنَ وَالْإِثْمَ وَالْبَغْيَ بِغَيْرِ الْحَقِّ وَأَنْ
تُشْرِكُوا بِاللَّهِ مَا لَمْ يُنَزِّلْ بِهِ سُلْطَانًا وَ
أَنْ تَقُولُوا عَلَى اللَّهِ مَا لَا تَعْلَمُونَ ۝

பகிரங்கமான அல்லது இரகசியமான தீய விஷயங்களையும் பாபம் செய்தலையும் நியாயமின்றி அட்டகாசம் புரிதலையும் எத்தகைய அதிகாரமும் இன்றி அல்லாஹ்வுக்கு இணைவைத்தலையும் நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது கூறுவதையுமே என் இறைவன் தடை செய்தான் என்று கூறுக. *(7 : 33)*

إِنَّمَا الْخَمْرُ وَالْمَيْسِرُ وَالْأَنْصَابُ وَالْأَزْلَامُ
رِجْسٌ مِنْ عَمَلِ الشَّيْطَانِ فَاجْتَنِبُوهُ

நிச்சயமாக மதுவும் சூதும் விக்கிரக ஆராதனையும் குறிகேட்பதும் ஷைத்தானின் வெறுக்கத்தக்க செயல்களே. எனவே இவற்றைத் தவிர்ந்து கொள்ளுங்கள். *(5 : 90)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا يَفْتِنَنَّكُمُ الشَّيْطَانُ كَمَا أَخْرَجَ أَبَوَيْكُمْ مِنَ الْجَنَّةِ ۝

விசுவாசிகளே, உங்கள் ஆதித்தாய் தந்தையரை சுவனத்திலிருந்து வெளியாக்கியது போல், ஷைத்தான் உங்களையும் கெடுத்துவிடக்கூடாது. *(7 : 27)*

وَلَا تَتَّبِعُوا خُطُوَاتِ الشَّيْطَانِ إِنَّهُ لَكُمْ عَدُوٌّ مُبِينٌ

ஷைத்தானின் அடிச்சுவட்டைப் பின்பற்ருதீர்கள். நிச்சயமாக அவன் உங்கள் பகிரங்கமான விரோதி. *(2 : 168)*

وَذَرُوا ظَاهِرَ الْإِثْمِ وَبَاطِنَهُ إِنَّ الَّذِينَ يَكْسِبُونَ الْإِثْمَ سَيُجْزَوْنَ بِمَا كَانُوا يَقْتَرِفُونَ ۝

பகிரங்கமான பாவத்தையும் இரகசியமான பாவத்தையும் விடுங்கள். நிச்சயமாக, பாவத்தைச் சம்பாதிப்போர், அவர்கள் செய்துகொண்டிருந்தவற்றின் கூலியைக் கொடுக்கப்படுவார்கள். *(6 : 120)*

وَلَا تَقْتُلُوا النَّفْسَ الَّتِي حَرَّمَ اللَّهُ إِلَّا بِالْحَقِّ

அல்லாஹ் தடுத்துள்ள உயிரை நியாயமின்றிக் கொன்றுவிடாதீர்கள். *(17 : 33)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

وَلَا تُفْسِدُوا فِي الْأَرْضِ بَعْدَ إِصْلَاحِهَا

பூவுலகைத் திருத்திய பிறகு அதிற் குழப்பம் செய்யாதீர்கள்.
(7 : 56)

وَلَا تَقْتُلُوا أَوْلَادَكُمْ خَشْيَةَ إِمْلَاقٍ نَحْنُ
نَرْزُقُهُمْ وَإِيَّاكُمْ ۝

வறுமையை அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொன்று விடவேண்டாம். அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே யாவும் அளிக்கின்றோம். (17 : 31)

وَلَا تَقْرَبُوا الزِّنَا إِنَّهُ كَانَ فَاحِشَةً وَسَاءَ سَبِيلًا

விபசாரத்தை அணுகாதீர்கள். அது மானங்கெட்ட தீய செயல்; மிகக் கெட்ட பாதை. (17 : 32)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اجْتَنِبُوا كَثِيرًا مِنَ الظَّنِّ
إِنَّ بَعْضَ الظَّنِّ إِثْمٌ وَلَا تَجَسَّسُوا وَلَا يَغْتَبْ
بَعْضُكُمْ بَعْضًا أَيُحِبُّ أَحَدُكُمْ أَنْ يَأْكُلَ
لَحْمَ أَخِيهِ مَيْتًا فَكَرِهْتُمُوهُ ۝

விசுவாசிகளே எண்ணங்களில் அனேகமானவற்றைத் தவிர்ந்து கொள்ளுங்கள். நிச்சயமாக சில எண்ணங்கள் பாவமானவை; ஒட்டுக் கேட்காதீர்கள். சிலர் சிலரைப் பற்றிப்புறம் பேசாதீர்கள். உங்களில் ஒருவர் இறந்து கிடக்கும் தன் சோதரனின் மாமிசத்தை உண்ண விரும்புவாரா? நீங்கள் அதை வெறுப்பீர்கள். (49 : 12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியும் நேர்மையும்

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُونُوا قَوَّامِينَ لِلَّهِ شُهَدَاءَ
بِالْقِسْطِ وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَآنُ قَوْمٍ عَلَىٰ أَنْ لَا
تَعْدِلُوا اعْدِلُوا هُوَ أَقْرَبُ لِلتَّقْوَىٰ ۝

விசுவாசிகளே, அல்லாஹ்வுக்காக நின்று நேர்மையாக சாட்சி சொல்பவர்களாயிருங்கள். ஒரு வகுப்பார் மீது உங்களுக்குள்ள, துவேஷம் அவர்கள்மீது நீதியற்று நடக்க உங்களைத் தூண்டக் கூடாது. நீதியை நிலைநாட்டுங்கள். அதுதான் இறை பக்திக்கு மிகவும் நெருங்கியது. *(5 : 8)*

إِنَّ اللَّهَ يَأْمُرُكُمْ أَنْ تُؤَدُّوا الْأَمَانَاتِ إِلَىٰ
أَهْلِهَا وَإِذَا حَكَمْتُمْ بَيْنَ النَّاسِ أَنْ تَحْكُمُوا بِالْعَدْلِ

அமானிதத்தை உரியவாறு ஒப்படைக்குமாறு அல்லாஹ் உங்களை ஏவுகிறான். மனிதருக்கிடையில் தீர்ப்புக் கூறினால் நீதி வழுவாது தீர்ப்புக் கூறுமாறும் அவன் கட்டளையிடுகின்றான். *(4 : 58)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டனைகள்

وَالسَّارِقُ وَالسَّارِقَةُ فَاقْطَعُوٓا۟ أَيْدِيَهُمَا جَزَآءًۢ
بِمَا كَسَبَا نَكَـٰلًا مِّنَ ٱللَّهِ ۗ وَٱللَّهُ عَزِيزٌ حَكِيمٌ ۝

அவர்கள் தேடிக்கொண்டதற்குக் கூலியாகவும் அல்லாஹ்வின் தண்டனையாகவும், களவு செய்த ஆணின் அல்லது பெண்ணின் கையை வெட்டுங்கள். அல்லாஹ் மிக்க கண்ணியவான் ; ஆழ்ந்த ஞானமுடையவன். *(5 : 38)*

ٱلزَّانِيَةُ وَٱلزَّانِى فَٱجْلِدُوا۟ كُلَّ وَٰحِدٍ مِّنْهُمَا
مِا۟ئَةَ جَلْدَةٍ ۖ وَلَا تَأْخُذْكُم بِهِمَا رَأْفَةٌ فِى
دِينِ ٱللَّهِ إِن كُنتُمْ تُؤْمِنُونَ بِٱللَّهِ وَٱلْيَوْمِ
ٱلْـَٔاخِرِ ۖ وَلْيَشْهَدْ عَذَابَهُمَا طَآئِفَةٌ مِّنَ
ٱلْمُؤْمِنِينَ ۝

விபசாரம் செய்த பெண்ணுக்கும் ஆணுக்கும் நூறு கசையடி வீதம் அடியுங்கள். நீங்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பியவர்களாயின், அல்லாஹ்வின் தண்டனையை நிறைவேற்று வதில், இவர்கள்மீது உங்களுக்கு இரக்கம் ஏற்படக்கூடாது. இவர் களின் இத்தண்டனையை விசுவாசிகளில் ஒரு குழுவினர் பார்க் கட்டும். *(24 : 2)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை மன்னிப்பு

وَاسْتَغْفِرْ لِذَنْبِكَ وَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ بِالْعَشِيِّ وَالْإِبْكَارِ

உமது பாவத்துக்காக மன்னிப்புக் கோருக. காலையும் மாலையும் உமது இறைவனைப் புகழ்ந்து துதி செய்வீராக. *(40 : 55)*

وَسَابِقُوا إِلَىٰ مَغْفِرَةٍ مِّن رَّبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا
السَّمَاءُ وَالْأَرْضُ أُعِدَّتْ لِلَّذِينَ آمَنُوا بِاللَّهِ
وَرُسُلِهِ ذَٰلِكَ فَضْلُ اللَّهِ يُؤْتِيهِ مَن يَشَاءُ
وَاللَّهُ ذُو الْفَضْلِ الْعَظِيمِ ۝

உங்கள் இறைவனின் மன்னிப்பையும் வான்புவி போன்று அகண்ட சுவனத்தையும் அடைவதிற் போட்டி போடுங்கள். அல்லாஹ்வையும் அவனுடைய றஸூலையும் நம்பியவர்கட்கு தயார் செய்யப்பட்டது அந்த சுவனம். அது அல்லாஹ்வின் அருள். அவன் விரும்பியவர்க்கு அதைக் கொடுப்பான். அல்லாஹ் மகத்தான அருளுடையவன். *(57 : 21)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

قُلْ يَا عِبَادِيَ الَّذِيْنَ اَسْرَفُوْا عَلَىٰ اَنْفُسِهِمْ لَا تَقْنَطُوْا مِنْ رَحْمَةِ اللّٰهِ اِنَّ اللّٰهَ يَغْفِرُ الذُّنُوْبَ جَمِيْعًا اِنَّهٗ هُوَ الْغَفُوْرُ الرَّحِيْمُ ٥

தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்ட அடியார்களே, அல்லாஹ்வின் அருளைப் பற்றி நம்பிக்கை இழந்து விடவேண்டாம். அல்லாஹ் எல்லாப் பாவங்களையும் மன்னிப்பான். நிச்சயமாக அவனே மன்னிப்பவன்; அவனே அன்புடையவன். *(39 : 53)*

وَاَنِيْبُوْا اِلٰى رَبِّكُمْ وَاَسْلِمُوْا لَهٗ مِنْ قَبْلِ اَنْ يَّأْتِيَكُمُ الْعَذَابُ ثُمَّ لَا تُنْصَرُوْنَ ٥

உங்களுக்கு வேதனை வந்து, நீங்கள் உதவி செய்யப்படாத நிலை வருதற்கு முன்னரே, நீங்கள் உங்கள் இறைவன்பால் திரும்பி அவனுக்கு முற்றாக வழிப்பட்டு நடவுங்கள். *(39 : 54)*

وَقُلْ رَّبِّ اغْفِرْ وَارْحَمْ وَاَنْتَ خَيْرُ الرّٰحِمِيْنَ

''இறைவ, என்னை மன்னித்துக் கிருபை செய்வாயாக. கிருபை செய்வோரில் நீயே மிகச் சிறந்தவன்'' என்று சொல்க. *(23 : 118)*

وَقُلْ رَّبِّ اَعُوْذُ بِكَ مِنْ هَمَزَاتِ الشَّيٰطِيْنِ وَاَعُوْذُ بِكَ اَنْ يَّحْضُرُوْنَ ٥

''நாயனே, ஷைத்தான்களின் தூண்டுதல்களிலிருந்தும் அவை என்னிடம் வராமலும் காப்பாற்றுவாயாக'' என்று கூறுக. **(23 : 97, 98)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COLLEGE
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org